ஒவ்வொரு ஆண்டும் ராமநாதபுரம் ஐஸ்வர்யாஸ் பேக்கரிஸ் சார்பாக கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கு கேக் சிலை

ராமநாதபுரம், டிச.18 ஒவ்வொரு ஆண்டும் ராமநாதபுரம் ஐஸ்வர்யாஸ் பேக்கரிஸ் சார்பாக கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்கு கேக் சிலை வைக்கப்படும். இதுவரைரத்தன்டாடா, பாரதியார், இளையராஜா, மரோடானா மற்றும் உலகக்கோப்பை ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் நூற்றாண்டுக்கும் மேலாக ராமநாதபுரத்திற்கும் மலேசியா நாட்டிற்கும் நிலையான தொடர்பு இருந்து வருகிறதென்ற வரலாற்று உண்மையை கொண்டாடும் வகையில் மலேசியாவின் பெருமைமிகு அடையாளமான இரட்டைகோபுரம் கேக் வடிவில் செய்யப்பட்டு கிறிஸ்மஸ் மற்றும் மற்றும் புத்தாண்டையொட்டி பார்வைக்காக ஐஸ்வர்யாஸ் பேக்கரிஸ்பாரதிநகர்கிளையில் வைக்கப்பட்டுள்ளது.

50 கிலோ சர்க்கரை மற்றும் 200 முட்டை கொண்டு உருவாக்கப்பட்ட சுமார் 7 அடி உயர இரட்டை கோபுரம் இரு நாடுகளுக்கிடையேயான நட்பை பிரதிபலிக்கும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கேக்சிலை முன்பு பொதுமக்கள் கண்டுகளித்து செல்பி எடுத்து செல்கின்றனர்.

சுருளிப்பட்டி மாநில நெடுஞ்சாலையில் முறையில்லாமல் ஆட்டோக்களை நிறுத்துவதால் இடையூறு

கம்பம், டிச. 18 தேனி மாவட்டத்தில் தலைசிறந்த சுற்றுலா தலமாகவும், புனிதஸ்தலமாகவும் சுருளி அருவி விளங்கி வருகிறது.

இங்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் கார், பஸ், வேன், டூவீலர்கள் மூலமாக இங்கு வந்து செல்கின்றனர்.

அவ்வாறு சுருளி அருவிக்கு வரும் அனைத்து வாகனங்களும் கம்பத்தில் இருந்து சுருளிப்பட்டி வழியாக மட்டுமே செல்ல முடியும். இதனால் இப்குதியில் உள்ள மாநில நெடுஞ்சாலை போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்படும்.

இந்நிலையில் சுருளிப்பட்டி நுழைவு பகுதியில் இருந்து பழைய சுருளி அருவி செல்லும் ரோடு வரை ஆங்காங்கேசாலையில் இரு புறமும் முறையில்லாமல் ஷேர் ஆட்டோக்களை நிறுத்தி வைத்து ஆட்களை ஏற்றி, இறக்கி விடுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதுடன் சிறு, சிறு விபத்துகளும் நடைபெற்று வருகிறது.

மேலும் தற்போது சபரிமலை சீசன் காரணமாக அதிகமான ஐயப்ப பக்தர்களின் வாகனங்கள் சென்று வருவதாலும், குடியிருப்பு வீடுகளுக்கு முன்பாக ஆட்டோக்களை முறையில்லாமல் நிறுத்து வதாலும் பெரிதும் இடையூறாக உள்ளதாக பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் புலம்பி வருகின்றனர். ஆகவே காவல் துறையினரும், வட்டார போக்குவரத்து துறை அதிகாரிகளும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில், திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகள்

திருவாரூர், டிச.18 நிறைந்தது மனம் நிகழ்ச்சியில், திருவாரூர் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை திருவாரூர் மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன், செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், கரையாபாலையூர் ஊராட்சியில் ஆர்ப்பாவூர் மற்றும் புங்காவூர் கிராமங்களில் பிரதம மந்திரி குடியிருப்புகள் வீடுகள் திட்டத்தின் கீழ் தலா ரூ.2.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் குடியிருப்பு வீடுகளை மாவட்ட கலெக்டர் மோகனச்சந்திரன், நேரில் பார்வையிட்டு உரிய அலுவலர்களிடம் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்கள்.

இச்செய்தியாளர் பயணத்தில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், கொரடாச்சேரி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

அனைத்து துறை அலுவலர்களுடனான வருடாந்திர ஆய்வு கூட்டம்

பெரம்பலூர், டிச.18 பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில்மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் மாவட்ட அளவிலான அனைத்து துறை அலுவலர்களுடனான வருடாந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் மிருணாளினி தலைமையில் நடைபெற்றது.

பெரம்பலூர் மாவட்டத்தில்எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசால் வழங்கப்படும் திட்டங்கள், சலுகைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்றும், எச்.ஐ.வி தொற்றை குறைத்திட மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு எந்தவிதமான நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றது என்பது குறித்தும் மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் அவர்கள் தெரிவித்ததாவது:

எய்ட்ஸ் என்பது ஒரு தொற்றும் நோய் இல்லை என்பதை பொதுமக்களுக்கு எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மேலும் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1,000 உதவித்தொகை, ஏ.ஆர்.டி சிகிச்சை பெறுபவர்களுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை, அந்த்யோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் தலா 35 கிலோ அரிசியும் மற்றும் ரூ.1000 விதவை உதவித்தொகை, பசுமைவீடுதிட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ரூ.2.50 லட்சமும், தாட்கோ மூலம் சிறு தொழில் செய்வதற்கு கடனுதவியையும், சமூக நலத்துறை மூலம் இலவச தையல் இயந்திரமும், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகின் மூலம் இலவச பேருந்து பயணச்சலுகை அட்டையும், விவசாயிகள் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் அடையாள அட்டை வைத்திருக்கும் நபர்களில் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களின் 18 வயது கீழ் உள்ள குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை, மற்றும் கல்வி, ஊட்டச்சத்துக்கான உதவித்தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும்,, தமிழக அரசால் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து எய்ட்ஸ் நோய் பாதித்தவர்களுக்கு, சம்மந்தப்பட்ட அலுவலர்கள் எடுத்துரைத்து இந்த சலுகைகளை எவ்வாறு பெற்று பயன்பெறலாம் என்பது குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், கலைமணி, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு திட்ட மேலாளர் சுமதி மற்றும் எச்.ஐ.வி உடன் வாழ்பவர்களுக்கான கூட்டமைப்பினைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட துறை முதல் நிலை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

பிறப்பு சான்றிதழ்

மனுதாரர் அருண்குமார்.ஆர், கதவு எண் 70, கார்ன்வால் சாலை, குன்னூர், நீலகிரி. கடந்த 10.04.2024 அன்று எனது மகன் லக்ஷின் என்பவர் க/எண் 70, கார்ன்வால் சாலை, குன்னூர், நீலகிரி மாவட்டம் என்ற முகவரில் பிறந்தார். அவருக்கு பிறப்பு சான்றிதழ் கேட்டு குன்னூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்து உள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் 15 தினங்களுக்குள் மேற்கண்ட அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன்.

மனுதாரர்
அருண்குமார் ஆர்.

கொரிஜெண்டம் படிவம் ஜி
ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்

(திவால்நிலை மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 இன் விதிமுறை 36ஏ (1) இன் கீழ்

இது திவால்நிலை மற்றும் திவால்நிலை குறிபீடு, 2016 மற்றும் திவால்நிலை மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நபர்களுக்கான திவால்நிலை தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016 ஆகியவற்றின் படி வெளியிடப்பட்ட 25/11/2025 தேதியிட்ட படிவம் ஜி மற்றும் 11/12/2025 தேதியிட்ட படிவம் ஜி-க்கான திருத்தம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கடைசி தேதி 10 (பத்து) நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது, அதன்படி படிவம் ஜி மற்றும் ஐஐஒஐ வழங்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகளுக்கான திருத்தப்பட்ட தேதிகள் பின்வருமாறு:

வ.எண்	தொடர்புடைய கூறுகள்	காலவரிசைகள்
10.	ஆர்வ வெளிப்பாட்டைப் பெறுவதற்கான கடைசி தேதி	டிசம்பர் 27, 2025 (17 டிசம்பர் 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
11.	வருங்காலத் தீர்வு விண்ணப்பதாரர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	ஜனவரி 06, 2026 (27 டிசம்பர் 2025 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
12.	தற்காலிக பட்டியல் விண்ணப்பதாரர்களுக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	ஜனவரி 12, 2026 (2 ஜனவரி 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
13.	13. வருங்காலத் தீர்வு விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி	ஜனவரி 17, 2026 (07 ஜனவரி 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
14.	வருங்கால தீர்வு விண்ணப்பதாரர்களுக்கு தகவல் குறிப்பாணை, மதிப்பீட்டு அணி மற்றும் தீர்வுத் திட்டங்களுக்கான கோரிக்கையை வழங்கிய தேதி.	ஜனவரி 20, 2026 (10 ஜனவரி 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
15.	தீர்வுத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	பிப்ரவரி 20, 2026 (10 பிப்ரவரி 2026 இலிருந்து நீட்டிக்கப்பட்டது)
16.	இஒஐ சமர்ப்பிக்க ரோசல் மின்னஞ்சல் ஐடி.	ip.guptapower@gmail.com

குறிப்பு: 25/11/2025 தேதியிட்ட படிவம் ஜி இன் பிற உள்ளடக்கங்களும் அப்படியே இருக்கும்.

தேதி: 18 டிசம்பர், 2025

எஸ்டி/-
சிஏ. பிரதீப் குமார் சுப்ரா
ஆர்.பி. எம்/எஸ்.குப்தா பவர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்
ஐபிஐஜ பதிவு எண்.: IBBI/IPA-001/IP-P01104/2017-18/11790
மின்னஞ்சல்: ip.guptapower@gmail.com

மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி: அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

சேலம், டிச.18 சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை சேலம் அய்யந்திருமாளிகையில் மாவட்ட கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மின்சார சிக்கன வார விழா இந்த வருடம் டிசம்பர் 14 முதல் டிசம்பர் 20 வரை கொண்டாடப்படுகிறது மின் சிக்கனம் என்பது தனி நபர் பொறுப்பு மட்டுமல்ல, நாட்டின்வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் மின் சிக்கனத்தை கடைபிடிப்பது அனைவரின் கடமையாகும். அந்தவகையில் இன்றையதினம் மின்சார சிக்கன வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மின் நுகர்வோரின் புகார்களை 94987 94987 என்ற தொலைபேசி எண் மூலம் தெரிவிக்க ஏதுவாக கடந்த 20.06.2021 அன்று மின்னகம் துவக்கி வைக்கப்பட்டு சேலம் மாவட்டத்தில் இது வரை மின்னகம் மூலம் பெறப்பட்ட 92,629 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், மின் நுகர்வோருக்கு சீரான மின்சாரம் வழங்கும் வகையில் ரூ.23.06 கோடி மதிப்பீட்டில் 402 புதிய மின் மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. சூரிய சக்தி மின் திட்டத்தின் மூலம் 2,539 சூரிய சக்தி மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மின்சார சிக்கன பாதுகாப்பு வழிமுறைகள் நட்சத்திர குறியீடு கொண்ட மின் சாதனங்களை பயன்படுத்தவும். ஆளில்லாத அறையில் ஓடும் மின் விசிறி, மின் விளக்குகள் அணைக்கவும். ஐ 25 ல் இயக்குவது, மின் ஒயரிங் வேலைகளை அரசு உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் செய்ய வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற நட்சத்திரக்குறியிட்ட மின்சாதனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

ப்ரிட்ஜ், கிரைண்டர் போன்றவற்றிற்கு நில இணைப்புடன் கூடிய மூன்று பின் சாக்கெட் உள்ள மின் பிளக்குகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் உள்ளிட்ட கருத்துக்களை பொதுமக்களுக்கு வலியுறுத்தும் வகையில் இப்பேரணி நடத்தப்பட்டது.

உடைந்த சுவிட்சுகள், பிளக்குகள், பழுதுபட்ட ஒயர்கள், மின்சா தனங்கள் உங்கள் பயன்பாட்டில்இருப்பின், அவற்றை தாமதமின்றி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். பிளக் பாயிண்ட்களில் குளவிக் கூடு கட்டாமல் இருக்க துளை அடைப்பான் உள்ள பிளக் பாயிண்ட்களை பயன்படுத்திடவும், ஆர்.சி.சி.பி.யை வீடுகளில், மெயின் ஸ்விட்ச் போர்டில் பொருத்தி மின் கசிவால் ஏற்படும் விபத்தை தவிர்த்திடவும் இப்பேரணியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், இருமுறை மின்சாரத்தில் பம்பு செட்டை இயக்காமல் முமுனை மின்சாரத்தில் பம்பு செட்டை இயக்கிடவும், தரமான மின்சாரம் கிடைக்க ஐ.எஸ்.ஐ. முத்திரையிட்ட நட்சத்திரக் குறியிட்ட மின்சக்தி சேமிக்கும் பம்பு செட்டை உபயோகிக்கவும், அனைவருக்கும் மின்சாரம் தொடர்ந்து கிடைக்கதேவைக்கேற்ப பம்பு செட்டை இயக்கவும், திறன் மிக்க மின் சாதனங்களை தேர்வு செய்து, நன்கு பராமரித்து, மின் செலவைக் குறைத்திடவும், அதே போன்று அறுந்து விழுந்த மின் கம்பிகளை கண்டால் உடனே அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு அல்லது (மின்னகம்) 94987 94987 எண்ணிற்கு தொடர்பு கொள்வது குறித்தும் உள்ளிட்ட கருத்துக்களை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு பேரணியானது சேலம் ஏற்காடு மெயின் ரோடு அய்யந்திருமாளிகையில் தொடங்கி அஸ்தம்பட்டி ரவுண்டானா வந்தடைந்தது.

இவ்விழிப்புணர்வு பேரணியில் மாநகராட்சி துணை மேயர் மா.சாரதாதேவி, தமிழ்நாடு மின்பகிர்மான கழக மேற்பார்வை பொறியாளர் திருநாவுக்கரசு, செயற்பொறியாளர் இராமச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், மின்சாரத் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், 500 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

திட்டக்குடி அருகே விடியல் பயணம் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது

திட்டக்குடி,டிச.18 கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே வேப்பூரில் புதுமுகங்கள் நடித்துள்ள விடியல் பயணம் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலை சாய் அப்போலோ நர்சிங் கல்லூரி வளாகத்தில் விருத்தாச்சலம் சட்டமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி குழுமத்தின் தாளாளர் சி.வெ.க. வெங்கடேசன் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு திரைப்படத்தின் பாடல்களை வெளியிட்டனர்.

திரைப்படத்தின்இயக்குனர் குமார் அனைவரையும் வரவேற்புரையாற்றினார்.

விசிக கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வீர.திராவிட மணி, கடலூர் கள்ளக்குறிச்சி மண்டல செயலாளர் சவுதி ராஜ்குமார், திமுக மருத்துவரணி வேப்பூர் பிரைடு லயன்ஸ் கிளப் பொருளாளர் டாக்டர் ஏ.ஆர்.தங்கதுரை, தொழிலதிபர் முனுசாமி ஆகியோர் பங்கேற்றனர். இத்திரைப்படத்தில் சமத்துவம் சமூக நீதி’க்கான திரைப்படமாக இருக்கும் என இப்படத்தின் இயக்குனர் மற்றும் குழுவினர் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் இப்படத்திற்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. இதில் கதிர் குரல் ஆசிரியரும் முன்னாள்ஒன்றியகவுன்சிலர் வா.க.சிவகுமார், சின்னராசு உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இப்படம் பிப்ரவரி மாதம் திரைக்கு வர இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.